©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY

PUBLISHED BY AUTHORITY

No. 302] CHENNAI, MONDAY, OCTOBER 4, 2010
Purattasi 18, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**COLLECTORS AND LOCAL AUTHORITIES**

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர்.**

**திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏடூர் ஊராட்சிமன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் 4180/09/அ3/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/460(a-1)/2010.**

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏடூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. மாரிமுத்து என்பவர் ஊராட்சி மன்றக் கூட்டத்தினை 30–05–2009–க்கு பிறகு கூட்டாதது, ஊராட்சி நிதியில் ரூ. 8,88,025/–ஐ விதிமுறைகளை கடைபிடிக்கப்படாமல் நிதி இழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205 உட்பிரிவு (11)–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி ஏடூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சி. மாரிமுத்து என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை செய்யப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஜாகீர்மங்களம் ஊராட்சிமன்றத் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*[ந.க. எண் 4748/09/அ3/உ.இ.(ஊ).]*

**No. VI(2)/460(a-2)/2010.**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஜாகீர்மங்களம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி இரா. பத்மா ராமு என்பவர் ஊராட்சிப் பகுதியில் மனைப்பிரிவுகளுக்கு நகர ஊரமைப்பு இயக்குநரின் ஒப்புதல் இல்லாமல் தன்னிச்சையாக தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினை துஷ்பிரயோகம் செய்து வீட்டுமனை அங்கீகாரம் வழங்கி ஊராட்சிக்கு நிதியிழப்பீடு ஏற்படுத்தியது, ஊராட்சி நிதியில் ரூ. 4,09,930/–ஐ விதிமுறைகளை கடைபிடிக்கப்படாமல் நிதி இழப்பு செய்தமைக்காக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 205 உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி ஜாகீர்மங்களம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி இரா. பத்மா ராமு என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை செய்யப்படுகிறது.

இந்த அறிவிக்கை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994, பிரிவு 262 (1)–ன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருவள்ளூர்,
**2010 அக்டோபர் 1.**

**T.P. ராஜேஷ்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (302)